**செய்தி வெளியீடு எண்: 113** **நாள்: 09.02.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

**சேலம் மாவட்டம், தலைவாசலில் சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் விவசாயப் பெருவிழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 9.2.2020**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

சர்வதேச தரத்தில் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழா மற்றும் விவசாயப் பெருவிழா, கண்காட்சி நிகழ்ச்சி நடைபெற்று கொண்டு இருக்கின்ற இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்

**திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே அற்புதமான கருத்துக்களை வழங்கிய, இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் நடைபெற அடித்தளமாக விளங்கிய மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்
**திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்களே!**

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
**மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!**

மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர்
**திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன்** அவர்களே!

அரசு தலைமை கொறடா
**திரு. எஸ்.ராஜேந்திரன்** அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்பு பிரதிநிதி
**திரு. என்.தளவாய் சுந்தரம்** அவர்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர்
**திருமதி பா.வளர்மதி** அவர்களே!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர்,
**திரு. பி.கே.வைரமுத்து** அவர்களே!

தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் தலைவர்,
இந்த நிகழ்ச்சிக்கு எனக்கு உறுதுணையாக விளங்கிய
**திரு. ஆர்.இளங்கோவன்** அவர்களே!

தமிழ்நாடு கால்நடை மருத்து அறிவியல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் **முனைவர் சி.பாலச்சந்திரன்** அவர்களே!

நபார்டு – சென்னையின் தலைமை பொது மேலாளர்
**திருமதி. பத்மா ரகுநாதன்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள்
திரு. என். சந்திரசேகரன் அவர்களே,
திரு.ஏ.கே.பி. சின்ராஜ் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான
திரு. செ. செம்மலை அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர்கள்
திரு. ஜி. வெங்கடாசலம் அவர்களே,
திரு. ஏ.பி. சக்திவேல் அவர்களே,
திருமதி பி. மனோன்மணி அவர்களே,
திரு. எஸ். ராஜா அவர்களே,
திரு. எஸ். வெற்றிவேல் அவர்களே,
திரு.ஆர்.எம். சின்னதம்பி அவர்களே,
திரு. அ. மருதமுத்து அவர்களே,
திருமதி கு. சித்ரா அவர்களே,
மற்றும் இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற
சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. குமரகுரு அவர்களே,
திரு. பிரபு அவர்களே,
திரு. தனியரசு அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
சேலம் ஆவின் தலைவர்
**திரு. வி.ஜெயராமன்** அவர்களே!

சேகோசர்வ் தலைவர்
**திரு. என்.தமிழ்மணி** அவர்களே!

தலைவாசல் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர்
**திரு. க.ராமசாமி** அவர்களே!

மாவட்ட ஊராட்சித் தலைவர்
**திருமதி ரா.ரேவதி** அவர்களே!

மாவட்ட ஊராட்சி உறுப்பினர்
**திரு. ப.இளங்கோவன்** அவர்களே!

பெரியேரி ஊராட்சி மன்றத் தலைவர்
**திரு. து.சேகர்** அவர்களே!

ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்
**திருமதி. திலகம் சந்திரசேகர்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய
இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் இருப்பதற்கு உறுதுணையாக விளங்கிய தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர்
**திரு.க.சண்முகம், இ.ஆ.ப., அவர்களே!**

திட்ட விளக்கவுரை ஆற்றி,
இந்த கால்நடை பூங்கா, மிக வேகமாக, துரிதமாக நடைபெற வேண்டும்,
இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் இருக்க வேண்டும்,
விவசாய பெருமக்களின் எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும்
என்பதற்காக சிறப்பாக இந்த அரங்குகளை அமைப்பதற்கும்,
இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து துணை நின்ற
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை அரசு முதன்மைச் செயலாளர் **மருத்துவர் கே.கோபால், இ.ஆ.ப., அவர்களே!**

விவசாயப் பெருவிழா, கண்காட்சி விழா,
விவசாய பெருமக்கள் கண்டுகளிக்க வேண்டும் என்று
இந்த நிகழ்ச்சியை சிறப்பாக இன்றைக்கு ஏற்பாடு செய்த
வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை
அரசு முதன்மைச் செயலாளர் **திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்திருக்கின்ற நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே,

அதேபோல, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற முன்னாள் அமைச்சர் திரு.கே.பி. முனுசாமி அவர்களே,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே,

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே, கழக நிர்வாகிகளே,

இந்த நிகழ்ச்சியிலே பெருந்திரளாக இந்த அரங்கமே நிரம்பி வழிந்து கடல் போல் காட்சி அளிக்கின்ற விவசாய பெருமக்களே,

பெரியோர்களே! தாய்மார்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

இறுதியாக இந்த நிகழ்ச்சியிலே நன்றியுரை ஆற்ற இருக்கின்ற,
இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும். இன்றைக்கு விவசாய பெருவிழா என்று சொல்கின்ற போது, விவசாய பெருமக்கள் அத்தனைப் பேரையும் அழைத்து வந்து, இந்த கண்காட்சியை பார்வையிடுவதற்கு, இந்த நிகழ்ச்சியை கண்டுகளிப்பதற்கு அடித்தளமாக விளங்கிய
சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் **திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்களே!**

உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

"**தன்னையே கொடுப்பதில் வாழைக்கு ஈடு**
**சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு**
**பொன்னையே தந்தாலும் உனக்கேது ஈடு**"

என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பாடிய பாடலுக்கு ஏற்ப, கால்நடை வளர்ப்பு என்பது வேளாண் பெருமக்களின் வாழ்விற்கும், பொருளாதாரத்திற்கும் மிகவும் அவசியமானது.

கால்நடை வளர்ப்பு என்பது நவீன வேளாண்மைத் துறையின் முக்கிய கூறுகளில் ஒன்று. மனித சமூகம் வேட்டையாடி உணவு திரட்டிய காலத்திற்குப் பின் வேளாண்மை நிலைக்கு மாறிய காலத்தில் இருந்தே குடும்பத்தின் ஒரு அங்கமாக கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

கால்நடை மற்றும் பறவைகள் வளர்ப்பின் மூலம், பால், இறைச்சி, முட்டை ஆகியவை கிடைப்பதனால், பெரும்பாலான விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு கால்நடை வளர்ப்பை பெரிதும் சார்ந்துள்ளனர். உழவர்களின் உற்ற தோழனாக விளங்கும் கால்நடைகள், உழவுத் தொழிலுக்கு பெரிதும் உதவுகின்றன. விளை நிலங்களை வளமாக்க, உழுவது மட்டுமன்றி, உரங்களையும் தந்து, வேளாண் பெருமக்களுக்கு உற்ற தோழனாக உள்ளன. அதிகரித்து வரும் கால்நடைப் பொருட்களின் உற்பத்தியால், அதிக ஏற்றுமதித் திறன் கொண்ட தொழிலாக கால்நடை வளர்ப்பு மாறி வருகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சியை நமது மாநிலம் அடைய கிராமப்புற பொருளாதாரத்தை முன்னேற்றுவது மிகவும் அவசியமாகும். கால்நடை வளர்ப்பை அதிகரிப்பதுடன், வேளாண் பெருமக்களின் வருமானமும் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள், 2011ல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை துவக்கினார்கள். இத்திட்டத்தை துவக்கும்போது,

**“கறவை மாடுகள் வழங்கும் திட்டம் மக்கள் வாழ்வில் ஏற்றம் அளிக்கும் உன்னத திட்டம் ஆகும். இது குடும்ப அளவில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய திட்டமாகும். இந்தத் திட்டம் வெண்மை புரட்சிக்கு வித்திடும் ஒரு உன்னதமான திட்டமாகும்”** என்றார் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையில் உதித்த இத்திட்டங்கள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளன. உதாரணமாக,

- திருச்சிராப்பள்ளி மாவட்டம், பனையபுரம் கிராம ஊராட்சியைச் சார்ந்த திருமதி சாரதா என்பவருக்கு 2011–12ம் ஆண்டு விலையில்லா கறவைப்பசு வழங்கும் திட்டத்தில், கன்றுடன் கூடிய கறவைப்பசு வழங்கப்பட்டது. தற்போது அந்த பயனாளி 9 ஆண்டுகளில், 9 பசுக்கள் மற்றும் 2 கன்றுகளுடன் நாளொன்றுக்கு சுமார் 50 லிட்டருக்கு மேல் பால்

உற்பத்தியை பெருக்கி தன்னுடைய வாழ்க்கையை, இன்றைக்கு சொந்த காலிலே நிறைவேற்றி வருகிறார்.

- இதே போன்று, தூத்துக்குடி மாவட்டம் இடைச்செவ்வல் கிராம ஊராட்சியைச் சார்ந்த திருமதி அய்யம்மாள் என்பவருக்கு 2011–12ம் ஆண்டில் விலையில்லா வெள்ளாடுகள்/செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தில் 3 பெட்டை மற்றும் ஒரு கிடா என மொத்தம் 4 ஆடுகள் வழங்கப்பட்டன. இதனை சிறந்த முறையில் வளர்த்ததன் பயனாக, நாளது தேதி வரை சுமார் 250 ஆட்டுக்குட்டிகள் கிடைக்கப்பெற்றதோடு, அதில் 170 ஆடுகளை விற்பனை செய்து 4.12 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டியுள்ளார். தற்சமயம் 80 ஆடுகளை பராமரித்து வருகிறார். ஆகவே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராம பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும், விவசாய பெருங்குடி மக்களும், விவசாய தொழிலாளர்களும், விவசாயத்தை சேர்ந்தவர்களும், அப்படி விவசாயத்தை சேர்ந்த வேளாண் பெருங்குடி மக்களும், விவசாய தொழிலாளர்களும் இன்றைக்கு சொந்த காலில் நிற்க வேண்டும் என்பதற்காக இந்த திட்டத்தை கொண்டு வந்து, இந்த திட்டம் இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற்று கொண்டு இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டம், சிக்கதாசன்பாளையம் கிராம ஊராட்சியைச் சேர்ந்த திருமதி சாரதா என்பவருக்கு கடந்த 2018–19ம் ஆண்டு விலையில்லா கோழிகள் வழங்கும் திட்டத்தில் 50 அசில் இன நாட்டுக் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன. இதனை சிறப்பாக பராமரித்து கடந்த ஒரு வருடத்தில் 850 முட்டைகள் மற்றும் 158 கோழிகள் கிடைக்கப்பெற்று, அதனை விற்பனை செய்து, இன்றைக்கு லாபம் பெற்றுள்ளார். தற்சமயம் 155 கோழிகளையும் பராமரித்து வருகிறார். ஆகவே, இந்த திட்டம் சிறப்பான திட்டம் என்பதற்காக இதை எடுத்துரைக்கின்றோம். ஆகவே, கிராமத்திலே வாழ்கின்ற அந்த வேளாண் பெண் தொழிலாளிகள் இந்த கோழி வளர்ப்பில்

ஈடுபடுவதன் மூலமாக இவ்வளவு லாபத்தை ஈட்டி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். இதுதான் கிராமப் பொருளாதாரம் மேம்பாடு அடைவதற்காக அரசு போட்ட திட்டம், அம்மா கொண்டு வந்த திட்டத்தை நாங்கள் மேன்மேலும் வளர்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

முட்டை, பால் போன்ற கால்நடைகளிலிருந்து கிடைக்கும் பொருட்களால் அக்குடும்பத்தினருக்கு ஊட்டச்சத்து கிடைக்கப் பெற்றதோடு, குடும்ப வருமானமும் பெருகி தொடர் வாழ்வாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்படி தமிழ்நாடு முழுவதும் ஏராளமான உதாரணங்களை சொல்லலாம்.

இந்த மூன்று திட்டங்களின் மூலம் பயன்பெற்ற இந்த பயனாளிகளை தமிழ்நாடு அரசின் சார்பில் கௌரவப்படுத்திட, இன்று இவ்விழாவில் அவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை

- 357 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 96 ஆயிரத்து 944 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும்,
- சுமார் 1,473 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 லட்சத்து 40 ஆயிரத்து 430 பயனாளிகளுக்கு 45 லட்சத்து 61 ஆயிரத்து 720 வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, விலையில்லாமல் கறவை மாடுகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கியதன் மூலமாக வேளாண் பெருமக்களும், வேளாண் பணிகளில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளிகளும், இந்த தொழிலில் ஈடுபட்டதன் மூலமாக இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இன்றைய தினம் கறவை மாடுகள் ஒரு லட்சத்து 98 ஆயிரம் கன்றுகள் ஈன்றும், ஆடுகள் 78 லட்சத்து 13 ஆயிரம் குட்டிகள் போட்டும், அதன் எண்ணிக்கை மிக அதிக அளவில் பெருகிவிட்ட காரணத்தினால், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து உள்ளது. இப்படிப்பட்ட மகத்தான இத்திட்டம் இன்றளவும் தொடர்ந்து வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பலனாக, 20வது கால்நடை கணக்கெடுப்பின்படி, வெள்ளாடுகளின் எண்ணிக்கையில் கடந்த கால்நடை கணக்கெடுப்பில் இருந்த எண்ணிக்கையை விட, தமிழ்நாடு 21 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்திய அளவில் கோழியின எண்ணிக்கையில் முதலாவது இடத்தையும், செம்மறியாடு எண்ணிக்கையில் 5வது இடத்தையும், வெள்ளாடுகளின் எண்ணிக்கையில் 7வது இடத்தையும் தமிழகம் பெற்றிருக்கிறது. இந்த அளவிற்கு கால்நடைகளின் எண்ணிக்கை பெருகி இருக்கிறதென்றால், கிராமப்புற மக்களின், குறிப்பாக பெண்களின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றி தனியாக நான் குறிப்பிட தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இந்த திட்டம் இன்றைக்கு பயனுள்ளதாக மக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகின்றேன்.

கால்நடை வளர்ப்பில் ஏற்பட்ட இந்த வளர்ச்சியை மேலும் முன்னெடுத்துச் செல்லவும், அதனால் விவசாயிகள் மேலும் பயன் பெற வேண்டும் என்ற அடிப்படையிலும் இந்த கால்நடைப் பூங்காவிற்கான திட்டத்தைத் தீட்டி, அது எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற உத்திகளை பல வல்லுநர்களிடம் பல நாட்களாக கலந்தாலோசித்தேன். மேலும், நான் அண்மையில் அமெரிக்கா சென்றபோது, பஃபலோ நகரில் உள்ள பெரிய கால்நடை பண்ணையை பார்வையிட்டு, அங்கு கடைபிடிக்கப்படும் அதிநவீன உத்திகளை கண்டறிந்து, இந்த கால்நடைப் பூங்காவில் அவற்றை அமல்படுத்த வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன்.

அது மட்டுமன்றி, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களையும், துறை அதிகாரிகளுடன் ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பி, அங்கு கால்நடை

வளர்ப்பில் உள்ள நவீன தொழில்நுட்பங்களையும், வசதிகளையும் அறிந்து வரச் செய்திருக்கிறேன். அந்த தொழில்நுட்பங்களையும் இங்கு அமையவுள்ள கால்நடை பூங்காவில் அமல்படுத்த உள்ளோம்.

இந்த கால்நடைப் பூங்காவில் அமைய உள்ள முக்கிய அம்சங்களைப் பற்றி நான் கூறுவதற்கு முன், மாண்புமிகு அம்மா அவர்களாலும், அம்மாவின் அரசாலும், கால்நடைத் துறைக்கு எவ்வாறு புதிய உத்வேகம் அளிக்கப்பட்டது என்பதைக் கூற விரும்புகிறேன்.

- ✓ தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டிலும், திருநெல்வேலியிலும் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி ஒசூரில் அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ அதிக அளவில் பசுங்கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் உதகை மாவட்ட கால்நடைப் பண்ணையில் ‘‘விந்து பிரிக்கும் அலகு’’ அமைக்கப்பட உள்ளது. விவசாயிகள் தாங்கள் விரும்பும் பாலின கன்றுகளை பெற்று பயனடையும் வகையில் இந்த திட்டத்தை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோம். காளை கன்றுகள் வேண்டும் என்றால் காளை, கிடாரி கன்று வேண்டுமென்றால் கிடாரி, என்று அந்த பாலினத்தை பிரித்து விவசாயிகள் என்ன விரும்புகின்றார்களோ, அந்த கன்றுகளை ஈன்றுகின்ற அளவிற்கு ஒரு நவீன முறையினை, விஞ்ஞான முறையிலே இத்திட்டத்தை நாங்கள் அமல்படுத்த இருக்கின்றோம்.
- ✓ ஆலம்பாடி மாட்டின மேம்பாட்டிற்காக, ஆராய்ச்சி நிலையம் ஒன்று தருமபுரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.
- ✓ 614 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,037 புதிய கால்நடை நிலைய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இது வரலாற்று சிறப்பு மிக்கது.

இன்றைக்கு வாய் பேசுகின்ற மனிதர்களுக்கு நாம் மருத்துவமனைகளை அமைக்கின்றோம். அதுபோல, வாயில்லா ஜீவன்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு, அம்மாவுடைய அரசு. இதுவரை இல்லாத அளவிற்கு கால்நடை பராமரிப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கால்நடை வளர்ப்பிலே ஒரு முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ வேண்டும். அதுபோல கால்நடைகளுக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால், உடனே அதற்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக கால்நடை மருத்துவமனைகளை அதிக அளவில் உருவாக்கி தந்த அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

- ✓ தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் 14 பன்முக மருத்துவமனைகள், 16 பெரு மருத்துவ மனைகள், 147 மருத்துவமனைகள், 2,721 மருந்தகங்கள், 825 கிளை நிலையங்கள் மற்றும் 56 நடமாடும் மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. அத்தனையும் நமது விவசாய பெருங்குடி மக்கள் உப தொழிலாக வளர்க்கின்ற கால்நடைகள், இன்றைக்கு நன்றாக வாழ வேண்டும். அதுபோல், அவைகளுக்கு ஏதாவது நோய் ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக அம்மாவுடைய அரசு இவ்வளவு மருத்துவமனைகளை உருவாக்கி தந்திருக்கிறது.
- ✓ கடந்த 9 ஆண்டுகளில் மட்டும், 8 பன்முக மருத்துவமனைகளும், 10 மருத்துவ மனைகளும், 200 கிளை நிலையங்களும், 1,080 மருந்தகங்களும் துவக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம், கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு குறித்த நேரத்தில் மருத்துவ சேவை வழங்கி, மாநிலத்தில் கால்நடைகளின் உற்பத்தி அளவு மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

- ✓ கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுப்பதற்கு இது வரை 17 சுற்றுகள் தடுப்பூசி போடப்பட்டு, தற்போது தமிழ்நாட்டில் கோமாரி நோய் முழுவதுமாக கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டில் சுமார் 93 லட்சம் பசு மற்றும் எருமை இனங்களுக்கும், 2019ஆம் ஆண்டில் சுமார் 94 லட்சம் பசு மற்றும் எருமை இனங்களுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மேலும், ஆண்டுக்கு இருமுறை கோமாரி நோய் தடுப்பூசி போடும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இன்றைக்கு நம்முடைய விவசாய பெருங்குடிமக்களால் வளர்க்கப்படுகின்ற அந்த கால்நடைகள் எந்த நோயும் தாக்காத அளவிற்கு எங்களுடைய அரசு கண்ணும் கருத்துமாக காத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.
- ✓ கால்நடைகளை நோய்களில் இருந்து காப்பாற்ற அவற்றுக்கு சில நேர்வுகளில் அவசர சிகிச்சை தேவைப்படுகிறது. கால்நடைகளின் உயிரிழப்பினைத் தடுத்து, வேளாண் பெருமக்களுக்கு ஏற்படும் இழப்பைத் தவிர்த்திட, சோதனை முறையில் 2016ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கால்நடை மருத்துவ அவசர ஊர்தி சேவைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இச்சேவை கால்நடை வளர்ப்போரிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றதால், 2 கோடியே 39 லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் மாற்றியமைக்கப்பட்ட 22 கால்நடை அவசர மருத்துவ ஊர்தியான "**அம்மா ஆம்புலன்ஸ்**" சேவையை சமீபத்தில் நான் துவக்கி வைத்தேன். இந்த சேவையை 1962 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் விவசாயிகள் பெற்று வருகிறார்கள். அம்மா ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தவுடன் கால்நடை மருத்துவர்கள் அங்கே வந்து அந்த ஆம்புலன்ஸ் மூலமாக அக்கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை அளிப்பார்கள். உயர் சிசிக்சை தேவைப்படும் பட்சத்தில்

ஆம்புலன்ஸ் மூலம் கால்நடை மருத்துவமனைக்கே எடுத்துச் சென்று சிகிச்சை அளித்து குணப்படுத்தி விவசாயிகளின் கால்நடைகளை காப்பாற்றும் ஒரே அரசு அம்மாவுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

✓ கால்நடைகளுக்கு அனைத்து சத்துக்களையும் கொண்ட உணவை சரியான முறையில் வழங்க வேண்டும். இதற்காக "**பசுந்தீவன பயிரும் பணப் பயிரே**" என்ற விழிப்புணர்வை கால்நடை வளர்ப்போரிடம் ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தவிர, **மாநில தீவன அபிவிருத்தித் திட்டம்** ஒன்றும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களிலிருந்தே கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனப் பயிர்களை பயிரிட்டு பயன் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- தமிழ்நாட்டில் நாட்டுக் கோழி முட்டை மற்றும் இறைச்சிக்கான தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றி அடைந்துள்ளது.
- இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு, 2018–19ஆம் ஆண்டில் புழக்கடை கோழி வளர்ப்பினை ஊக்குவிக்கும் விதமாக, சென்னை தவிர, அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற ஏழைப் பெண்கள் பயன் பெறும் வகையில், கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 77,000 பயனாளிகளுக்கு தலா 50 விலையில்லா அசில் நாட்டினக் கோழிகளை கூண்டுகளோடு வழங்கும் திட்டத்தை துவக்கியது.
- இத்திட்டத்தின் கீழ் கடந்த 2 ஆண்டுகளில் 54 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில், ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 362 கிராமப்புற பெண்களுக்கு 44 லட்சத்து 84 ஆயிரத்து 50 கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கால்நடைகள் மற்றும் கோழிகள் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, கிராமப்புற பொருளாதாரம் மேம்படுத்தப்பட்டதன் மூலமாகவும், பல்வேறு வேளாண் அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் மூலமாகவும், அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய முன்னேற்றங்கள் வாயிலாகவும், ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ள நீடித்த நிலையான அபிவிருத்தி இலக்குகளில் ஒன்றான **‘‘வறுமையில்லா நிலை’’யை அடைவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுடன் இந்தியா ஆசியான் முகமை மேற்கொள்ளவிருந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில், பால் பொருட்கள் சேர்க்கப்பட்டால், அது உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களை பெரிதும் பாதிக்கும் என்பதை எடுத்துரைத்து, அதனைத் தவிர்க்க மாண்புமிகு மத்திய வர்த்தகத் துறை அமைச்சரிடம் வலியுறுத்தினேன். **அதன் காரணமாக தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதிலும் உள்ள பால் உற்பத்தியாளர்கள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு அம்மா அவர்களும், அம்மாவின் அரசும் எடுத்த பல்வேறு முயற்சிகளின் பயனாக, தமிழ்நாட்டில் பால் உற்பத்தி அதிகரித்து, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அது போலவே, **பால் கொள்முதல் திறனைப் பொருத்தவரை, 2010–2011**ஆம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு சுமார் **21** லட்சம் லிட்டர் என்ற அளவில் இருந்து **2019–20**ஆம் ஆண்டில் சுமார் **34** லட்சம் லிட்டராக அதிகரித்திருக்கின்றது.

- பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஆவின் நிறுவனம் அருகிலேயே கொள்முதல் செய்வதற்கு வசதியாக மாண்புமிகு அம்மாவின் அரசால் **8** புதிய மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பால் உற்பத்தியாளர்களின் சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளன.

- பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அண்மையில் தேர்தல் நடத்தி, நிர்வாகத்திற்கு வலு சேர்த்துள்ளோம். மேலும், அனைத்து ஒன்றிய தலைவர், பொது மேலாளர் மற்றும் பால் வளத் துணைப் பதிவாளர் ஆகியோருடன் மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு மூத்த அமைச்சர் பெருமக்கள் ஆகியோருடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள வேளாண் பெருமக்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர உத்தரவிட்டுள்ளேன்.
- பால் உற்பத்தியாளர்களுக்கு கணிசமான வருமானம் கிடைக்கும் வகையில், கடந்த ஆண்டு பால் கொள்முதல் விலை எருமைப் பால் லிட்டருக்கு 6 ரூபாய் அளவிற்கும், பசுவின் பால் லிட்டருக்கு 4 ரூபாய் அளவிற்கும் உயர்த்தியுள்ளோம்.
- பெருகி வரும் பால் உற்பத்தியை உரிய முறையில் சந்தைப்படுத்தும் வகையில், மக்கள் விரும்பும் வண்ணம் கேரட், ஆப்பிள், மாம்பழம் போன்ற புதிய ரக நறுமண பால் மற்றும் திராட்சை, அன்னாசி, ஆரஞ்சு, சாக்லேட் போன்ற ஐஸ்கிரீம் வகைகளை நமது ஆவின் நிறுவனம் தயாரித்து விற்பனை செய்து வருகிறது.
- மேலும், சிங்கப்பூர், ஹாங்காங், கத்தார் மற்றும் துபாய் ஆகிய வெளி நாடுகளில் ஆவின் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன.
- இது தவிர, மாண்புமிகு அம்மாவின் அரசால், 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றும், 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆனையூரில் நறுமண பால் உற்பத்தி ஆலையும் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பால் உற்பத்தியை பெருக்குவதற்கு, நியாயமான விலையில் தரமான கால்நடைத் தீவனம் வழங்க, தற்போது ஈரோடு பால் பண்ணையில் 150 மெட்ரிக் டன் அளவில் ஒரு நவீன தானியங்கி தொழில் நுட்ப கால்நடைத்

தீவன உற்பத்தி தொழிற்சாலை இயங்கி வருகிறது. இம்மையம் விரிவாக்கம் செய்யப்படும்.

- புதிதாக ஒரு கால்நடைத் தீவன தொழிற்சாலை விருதுநகரில் அமைக்கப்பட்டு வருகிறது.
- **மதுரையில் உள்ள கால்நடைத் தீவன தொழிற்சாலை மீண்டும் செயலாக்கத்திற்கு கொண்டு வரப்படும்.**
- **அது மட்டுமல்ல, இன்றைக்கு விவசாயிகளால் வளர்க்கப்படுகின்ற கால்நடைகளுக்கு தரமான கால்நடை தீவனம் வழங்க வேண்டும் என்பதற்காக மேலும் 3 புதிய கால்நடைத் தீவன தொழிற்சாலைகள் திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாவட்டத்தில் அமைக்கப்படும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். தரமான கால்நடை தீவனத்தை கால்நடைகளுக்கு கொடுத்தால் தான் அதிக பால் கறக்கும். அந்த அடிப்படையிலே கூடுதலாக மூன்று மாவட்டத்திலே இந்த கால்நடை தீவன தொழிற்சாலைகள் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.**
- கடந்த 8 ஆண்டுகளில் மட்டும் 58 நவீன பாலகங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு அனைத்து ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் எளிய முறையில் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

  - இன்றைக்கு மீன் உற்பத்தியை பொறுத்த வரையில்,

✓ பூம்புகாரில் 148 கோடி ரூபாய் செலவில் ஒரு மீன்பிடி துறைமுகம்,

✓ இராமநாதபுரம் மூக்கையூரில் 114 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மீன்பிடி துறைமுகமும் அமைக்கப்பட்டுள்ளது.

✓ இது தவிர, திருவொற்றியூர் குப்பத்தில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளப்பள்ளத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் தரங்கம்பாடியிலும், கடலூரிலும் தலா 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்பட்டு

வருகின்றன. மீனவர்களின் கோரிக்கைகளை ஏற்று மீன்பிடி துறைமுகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

- ✓ கடந்த 8 ஆண்டுகளில் 57 மீன் இறங்கு தளங்கள் 441 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. 30 அரசு மீன் பண்ணைகள் 103 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ 12 இடங்களில் கடல் அரிப்பு தடுப்பு சுவர்கள் 168 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ 5 இடங்களில் 72 கோடி ரூபாய் செலவில் முகத்துவாரம் ஆழப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- ✓ 16 நவீன மீன் விற்பனை அங்காடிகள், 3 நடமாடும் மீன் உணவுக் கூடங்கள் மற்றும் ஒரு நவீன மீன் உணவு உற்பத்திக் கூடமும் அமைக்கப்பட்டு, சந்தைப்படுத்தும் வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்புக்காக 66 கோடி ரூபாய் செலவில் கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ 2019–20ஆம் ஆண்டில் மீன்பிடி தடைகால நிவாரண உதவியாக 1.64 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு சுமார் 81.75 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ 1.04 லட்சம் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி குறைந்த கால நிவாரணத் தொகையாக 51.84 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.
- ✓ எரிபொருள் மானியம்

போன்றவற்றை மீனவர்களுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது.

- ✓ மீன் வளர்ப்போருக்கு தரமான மீன் குஞ்சுகளை வழங்குதல்,
- ✓ புதிய வளர்ப்பின மீன் இனங்களை அறிமுகம் செய்தல்,
- ✓ நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல்,

- ✓ சுகாதாரமான முறையில் உள்நாட்டு பகுதிகளில் மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் அங்காடிகள் ஏற்படுத்துதல்

போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, 6.75 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்து, தமிழ்நாடு இந்தியாவிலேயே 4வது இடத்தை பெற்றுள்ளது.

''**கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி**'' என்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடலுக்கு ஏற்ப, நமது விவசாயிகளை பேணிப் பாதுகாத்திட, ஏரிகளை தூர்வாரி பராமரித்து நீரின் கொள்ளளவை உயர்த்தியும், காவேரியில் கடைமடை வரை வாய்க்கால்களைத் தூர் வாரி, நீர் கொண்டு சென்ற காரணத்தாலும், தமிழ்நாட்டில் வேளாண் பயிர் சாகுபடி பரப்பு, இந்த ஆண்டில் 7 லட்சம் ஏக்கர் கூடுதலாக பயிர் செய்யப்பட்டுள்ளது. அதே போல, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழைநீர் சேகரிப்பை உறுதிப்படுத்தவும், நீர்நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், **"நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்" என்ற ஒரு மகத்தான மக்கள் இயக்கத்தை சென்ற ஆண்டு நான் துவக்கி வைத்தேன்.**

இது தவிர, வேளாண் பெருமக்களின் நலனை பேணிக் காக்கும் அரசாக விளங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், அவர்களின் கல்வி, திருமணம், விபத்து நிவாரணம் போன்ற பல்வேறு நிவாரணங்களுக்காக இதுவரை 1,868 கோடி ரூபாய் வழங்கியுள்ளது.

''**விவசாயி சேற்றில் கால் வைத்தால் தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும்**'' என்பதை நான் ஏற்கனவே சட்டசபையில் எடுத்துரைத்தேன். அந்த அளவிற்கு விவசாயிகள் கடுமையாக உழைக்க கூடியவர்கள். இரவு பகல் பாராமல், வெயில், மழை பொருட்படுத்தாமல் ரத்தத்தை வியர்வையாக மண்ணில் சிந்தி உழைக்கின்ற விவசாய பெருங்குடி மக்களுக்கு எங்களுடைய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி கொண்டு இருக்கிறது. நானும் ஒரு

விவசாயி என்பதால், வேளாண் பெருமக்களின் பிரச்சனைகளையும், அவர்களின் தேவைகளையும் உணர்ந்து நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக, வேளாண் துறையில் இந்த அரசு பல்வேறு முத்திரைகளை பதித்து வருகிறது.

ஏற்கனவே நம்முடைய வேளாண்மைத் துறை செயலாளர் அவர்கள் அழகாக குறிப்பிட்டார்கள். எந்தெந்த வகையில் விவசாயிகளுக்கு அரசு உதவி செய்கிறது என்று தெளிவுபடுத்தி சுட்டிக்காட்டினார்கள்.

- ✓ 2016–2017ல் நிலவிய வறட்சியின் பிடியில் இருந்து விவசாயிகளைக் காக்க, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், வறட்சி நிவாரணமாக 2,247 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கிய அரசு அம்மாவுடைய அரசு.
- ✓ 2011ஆம் ஆண்டு முதல் இது வரை சுமார் 90 லட்சம் விவசாயிகள் பயன் பெறும் வகையில், 48 ஆயிரம் கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் எந்த அரசும் வழங்க முடியாத அளவிற்கு உரிய நேரத்திலே வேளாண் பெருங்குடி மக்கள் பயிர் செய்ய வேண்டும் என்பதற்காக, நடவு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக, பருவத்திலே பயிர் செய்ய வேண்டும் என்பதற்காக அம்மாவுடைய அரசு 48,000 கோடி ரூபாயை பயிர் கடனாக வழங்கியுள்ளது.
- ✓ பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் இந்தியாவிலேயே ஒரு சாதனை அளவாக 7,528 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக பெற்று தந்திருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை இந்தியாவிலேயே அதிக அளவில் பெற்றுத் தந்த அரசு அம்மாவுடைய அரசு.
- ✓ வேளாண் பெருமக்களின் சேவைக்காக உழவன் கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றைக்கு நவீன முறையிலே விவசாய பணிகளை மேற்கொள்ள வேண்டும். விவசாயிகளின் குறைகளை

தீர்க்க வேண்டும் என்பதற்காக இந்த உழவன் கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தி இருக்கின்றோம்.

- ✓ அம்மா அவர்களின் அரசு விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு அரணாக உள்ள அரசு. அதனால் தான் கடந்த ஆண்டு, அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் மக்காச்சோளம் பாதிக்கப்பட்ட போது, அந்த விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அம்மாவுடைய அரசு, பாதிக்கப்பட்ட மக்காச்சோள விவசாயிகளுக்கு, அவர்களது இழப்பினை ஈடு செய்ய 186.25 கோடி ரூபாய் நிவாரணம் இந்த அரசால் வழங்கப்பட்டது. மேலும், இவ்வாண்டு படைப்புழு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த, 47 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசே பூச்சி மருந்தை தெளிக்க நடவடிக்கை எடுத்து விவசாயிகளை பாதுகாத்த அரசு அம்மாவுடைய அரசு.
- ✓ டெல்டா மாவட்ட பகுதிகளில், சம்பா நெற்பயிர்களில் ஆனைக்கொம்பன் பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிப்பதற்காக 82 லட்சம் ரூபாய் நிதி வழங்கி உரிய நேரத்தில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்பட்டது.
- ✓ அதே போன்று, இந்த ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில், சம்பா நெற்பயிர்களில் புகையான் தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட மகசூல் இழப்பினை ஈடு கட்டும் விதமாக, பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை பெற்றுத்தர மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.
- ✓ தென்னை விவசாயிகள் அதிக லாபம் ஈட்டும் வகையில் தென்னம்பாளையிலிருந்து “நீரா” பானத்தை உற்பத்தி செய்வதற்கு உரிய சட்ட திருத்தத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டது. இதுவரை, 13 தென்னை உற்பத்தியாளர் சங்கங்களுக்கு உரிமம் வழங்கப்பட்டு 8 லட்சம் லிட்டர் “நீரா” பானம் தயாரிக்கப்பட்டு அதிலிருந்து 11 கோடி ரூபாய் மதிப்பில் மதிப்பு

கூட்டப்பட்ட உப பொருட்கள் தயாரித்து கிட்டத்தட்ட **6,500** தென்னை விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

- ✓ அறுவடைக்குப்பின் வேளாண் விளைபொருட்களில் ஏற்படும் இழப்பினை குறைக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு வேளாண் பெருமக்களின் நலனை கருத்தில் கொண்டு, விளைபொருட்களை பதப்படுத்துவதிலும், அதனை மதிப்பு கூட்டுவதிலும் கவனம் செலுத்தி வருகிறது. அதன் அடிப்படையில், பழங்கள் மற்றும் காய்கறிகள் பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக**585 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18 மாவட்டங்களில் விநியோகத்தொடர் மேலாண்மை திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.**
- ✓ **மேலும், சேலம், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, கடலூர், திருவண்ணாமலை, தேனி, மதுரை மற்றும் விழுப்புரம் ஆகிய 8 மாவட்டங்களில் 217 கோடி ரூபாய் மதிப்பில் உணவுப் பூங்காக்கள் அமைக்கும் பணியில் எனது தலைமையிலான அரசு விரைந்து செயலாற்றி வருகிறது.** தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் இந்த தொடர் நடவடிக்கையினால், விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நேரடியாக இத்தகைய உணவு பதப்படுத்தும் நிலையங்களுக்கு கொண்டு சென்று நல்ல விலை கிடைக்க எங்களுடைய அரசு ஏற்பாடு செய்து வருகிறது. மேலும், விளைபொருட்கள் வீணாவதும் கணிசமாக குறையும். உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் அதிக எண்ணிக்கையில் உருவாகி, அதனால் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். இதன் அடிப்படையில்தான், நான் உணவு பதப்படுத்தும் கொள்கை ஒன்றினை வெளியிட்டேன். இந்த கொள்கையின்படி, தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையினை துவங்க முன்வருபவர்களுக்கு முதலீட்டு மானியம், வட்டி மானியம், முத்திரைக் கட்டண விலக்கு, வரிச் சலுகை போன்ற பல்வேறு சலுகைகளை

அறிவித்து, இந்த திட்டத்தை ஒரு முன்னோடி திட்டமாக துவக்கி வைத்திருக்கின்றோம்.

- ✓ **இதுபோன்று, இன்னும் தமிழ்நாட்டில் கூடுதலாக உணவு பதப்படுத்தும் தொகுப்புகளையும், மிகப்பெரிய உணவு பூங்காக்களையும் உருவாக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற ஒரு மகிழ்ச்சியான தகவலை இந்த நேரத்தில் நான் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.**
- ✓ கடந்த 3 ஆண்டுகளில், 3.3 லட்சம் எக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத் திட்டம் சுமார் 1,480 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ கடந்த 8 ஆண்டுகளில், 92 ஆயிரத்து 112 டிராக்டர், பவர் டில்லர், நடவு மற்றும் அறுவடை இயந்திரங்கள் ஆகியவை 486 கோடி ரூபாய் மானியத்தில் வாங்கி வேளாண் பெருமக்கள் பயன் பெற்றுள்ளனர்.
- ✓ வேளாண் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு பெற்று, விவசாயிகள் பயன் பெறும் வண்ணம், 1,665 இயந்திர வாடகை மையங்கள் வட்டார அளவிலும், சுமார் ஆயிரம் வாடகை மையங்கள் கிராம அளவிலும், 234 கோடி ரூபாய் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ கடந்த 8 ஆண்டுகளில் 3 அரசு வேளாண்மை கல்லூரிகளும், ஓர் அரசு தோட்டக் கலை கல்லூரியும் உருவாக்கப்பட்டு, ஆண்டுக்கு 365 வேளாண்மைப் பட்டதாரிகள் கூடுதலாக பயின்று வருகின்றனர். இது தவிர, 23 தனியார் கல்லூரிகளும் துவங்கப்பட்டு, கூடுதலாக 2,500 மாணவர்கள் வேளாண் கல்வி பயில வழிவகுக்கப்பட்டது.
- ✓ தமிழ்நாட்டில் 7 தட்பவெப்ப மண்டலங்கள் உள்ளதால், பழங்கள், காய்கறிகள், மலர்கள் உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு உகந்த பகுதியாக தமிழ்நாடு விளங்குகிறது. விவசாயிகளின் வருமானத்தை பெரிய அளவில் பெருக்கக் கூடிய

தோட்டக்கலைப் பயிர்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், 2011ஆம் ஆண்டிலேயே திருச்சிராப்பள்ளியில் மகளிருக்கென புதிதாக ஒரு அரசு தோட்டக்கலைக் கல்லூரியினை துவக்கி வைத்தார். தோட்டக்கலைப் பயிர்கள் பற்றிய ஆராய்ச்சி, புதிய உத்திகள், விரிவாக்கம், பரப்பு மகசூல் மற்றும் விவசாயிகளின் வருமானம் அதிகரித்திட மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருகிறது.

- ✓ அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மலர் உற்பத்தி செய்கின்ற விவசாய பெருமக்களும், முன்னாள் அமைச்சர் திரு.கே.பி. முனுசாமி அவர்கள் அப்பகுதி விவசாயிகளுடன் நேரில் வந்து கிருஷ்ணகிரி, ஓசூர், சேலம் மற்றும் பல்வேறு இடங்களிலே விவசாயிகள் அதிக அளவில் மலர் உற்பத்தி செய்கிறார்கள், ஆனால் மலர் உற்பத்திக்கு தகுந்த விலை கிடைக்கவில்லை, அதனால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, ஓசூரிலே சர்வதேச மலர் ஏல மையம் ஆரம்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையிலே, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே ஓசூரில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கக் கூடிய பணி இப்பொழுது நடைபெற்று கொண்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.
- ✓ கடந்த 8 ஆண்டுகளில், 771 வேளாண் அலுவலர்களும், 372 தோட்டக்கலை அலுவலர்களும், 135 வேளாண் பொறியாளர்களும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இப்படி நிறைய பணிகள் இருக்கிறது.
- ✓ சிறு குறு விவசாயிகளின் நலனுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு கூட்டுப் பண்ணைய திட்டத்தினை 2017–18ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இதுவரை 6 லட்சம் விவசாயிகளை ஒருங்கிணைத்து 6 ஆயிரம் உழவர் உற்பத்தியாளர் குழுக்கள்

அமைக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு குழுவுக்கும் தொகுப்பு நிதியாக 5 லட்சம் ரூபாய் வழங்கி, அதன் மூலம் இதுவரை 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேளாண் இயந்திரங்கள் வாங்கி கூட்டு முறையில் சாகுபடி செய்து பயன் பெற்று வருகின்றனர்.

- ✓ சிறு, குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உழவர் உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளாக மாற்றிடவும், இவ்வமைப்புகளுக்கு போதிய கடனுதவி தந்து நிர்வாக, வணிக மற்றும் வாணிப ரீதியாக வலுப்படுத்தவும் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. 2019–20ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட அறிக்கையில், உழவர் உற்பத்தியாளர் அமைப்புக்கென தனி கொள்கை ஒன்று வகுக்கப்படும் என மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்தது. அதனைச் செயல்படுத்தும் வகையில், **தமிழ்நாடு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான கொள்கையினை இன்று நான் வெளியிட்டுள்ளேன்.** இது சிறு குறு விவசாயிகளின் வாழ்வில் ஒரும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன்.
- ✓ மானாவாரி சாகுபடி மூலம் அதிக லாபம் ஈட்டும் வகையில் நீடித்த, நிலையான மானாவாரி இயக்கம் என்ற முன்னோடி திட்டத்தினை 2016–17ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தில் 25 லட்சம் ஏக்கர் பரப்பில் பல்வேறு மானாவாரி நில நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு 9 லட்சத்து 44 ஆயிரம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு பல திட்டங்களையும் இன்னும் பல்வேறு தொடர் நடவடிக்கைகளையும் எடுத்த காரணத்தால், வேளாண் பெருமக்களின் வருமானம் வெகுவாக உயர்ந்து, கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முத்தாய்ப்பாக, வேளாண் பெருமக்களாகிய நீங்கள் கடுமையாக உழைத்ததன் காரணமாக தமிழ்நாட்டில்

வேளாண் உற்பத்தி பெருகி, தமிழ்நாடு மத்திய அரசின் உயரிய விருதான **“கிருஷி கர்மான்” விருதினை கடந்த 8 ஆண்டுகளில் 5 முறை பெற்றுள்ளது.** இந்த சிறப்பை வேளாண் பெருமக்களாகிய உங்களுக்கு காணிக்கை ஆக்குகிறேன்.

இது போன்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, ஒரு மைல் கல்லாக இங்கு வேளாண் பெருமக்களுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும், மீனவ நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக, உலகத் தரத்தில் மிகப் பிரமாண்டமான நவீன கால்நடைப் பூங்கா சுமார் 1,023 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்க உள்ளது. அதற்கான அடிக்கல் இன்று நாட்டப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா அமைப்பதற்கான பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கால்நடைப் பூங்காவில் இடம்பெற உள்ள சிறப்பு அம்சங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ✓ இந்த கால்நடைப் பூங்கா சுமார் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ளது.
- ✓ இந்த பூங்கா 3 பிரிவாக அமையும். முதல் பிரிவில் நவீன வசதிகள் கொண்ட கால்நடை மருத்துவமனை, நவீன பண்ணை முறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் காட்டும் வகையிலான கறவை மாட்டுப் பண்ணை ஆகியவை அமைக்கப்படும். இதுதவிர, காங்கேயம், உம்பளாச்சேரி, ஆலம்பாடி, புலிக்குளம், பர்கூர் ஆகிய உள்நாட்டு மாட்டு இனங்களின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்கப் பண்ணையும், ராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி போன்ற நாட்டு நாய் இனங்களின் இனப்பெருக்கப் பிரிவுகளையும் உள்ளடங்கிய கால்நடைப் பண்ணையாக உருவாக்கப்படும்.
- ✓ அதே போல, மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, சென்னை சிவப்பு, கீழக்கரிசல், வேம்பூர், திருச்சி கருப்பு, கோயம்புத்தூர், கச்சைக்கட்டி

கருப்பு, செவ்வாடு மற்றும் நீலகிரி போன்ற உள்நாட்டு செம்மறி ஆட்டினங்கள் மற்றும் கன்னி ஆடு, கொடி ஆடு மற்றும் சேலம் கருப்பு போன்ற வெள்ளாட்டினங்களின் இனப்பெருக்கப் பிரிவுகளையும் உள்ளடக்கிய பண்ணையாகவும் உருவாக்கப்படும்.

- ✓ வெண்பன்றிகள் வளர்ப்பினை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து வசதிகளுடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த வெண்பன்றிப் பண்ணை அமைக்கப்பட உள்ளது.
- ✓ பூங்காவின் இரண்டாம் பிரிவில் பால், இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றை பாதுகாத்து பதப்படுத்துதல், அவற்றில் இருந்து உப பொருட்கள், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் சந்தைப்படுத்துவதற்கான வசதிகள் உருவாக்கப்படும்.
- ✓ இங்கு அமையவிருக்கும் மீன் வள மாதிரி வளாகத்தில் 2.94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காற்று புகுத்திகளை பயன்படுத்தியும், நீரினை மறுசுழற்சி செய்தும், 2 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பிலான மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் ஆண்டுக்கு 20 லட்சம் தரமான மீன் குஞ்சுகள் மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட உள்ளது.
- ✓ பூங்காவின் மூன்றாம் பிரிவில் கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உயர் கல்வி, ஆராய்ச்சி, விவசாயிகளுக்கான பயிற்சி மையம், தொழில் முனைவோர் பயிலரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய வளாகம் அமைக்கப்படும்.
- ✓ இதே வளாகத்தில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி 82.17 கோடி ரூபாய் செலவில் அமைக்கவிருக்கிறோம். இதன் மூலம் 80 கால்நடை மருத்துவப் படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக கிடைக்கும்.
- ✓ இந்த நவீன பூங்காவில், தமிழ்நாட்டில் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற அனைத்து மாணவர்களும் பயிற்சி மேற்கொள்ளவும், உலக நாடுகளில் உள்ள கால்நடை மருத்துவம்

படிக்கின்ற மாணவர்களும் இங்கே வந்து ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

- ✓ மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகள் கொண்ட வளாகமாக இது அமையும்.
- ✓ தமிழகத்தில் நிலவி வரும் தட்பவெப்ப நிலைக்கு ஈடு கொடுத்து நோய் எதிர்ப்பு திறனுள்ள, குறைந்த பராமரிப்பு செலவில் அதிக பால் கொடுக்கக் கூடிய வகையிலான கலப்பின மற்றும் நாட்டின பசுக்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.
- ✓ இங்கு 500 கலப்பின பசுக்கள் கொண்ட உலகத்தரம் வாய்ந்த அதிநவீன கால்நடைப் பண்ணை ஒன்று உருவாக்கப்படும். இதில் 25,000 லிட்டர் பாலை பதப்படுத்தும் திறன் உள்ள, 12 வகையான பால் உபபொருட்கள் தயாரிக்கும் தானியங்கி அதி நவீன தொழிற்சாலையும், 50 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட அதிநவீன கால்நடை தீவன மற்றும் தாது உப்புக் கலவைத் தொழிற்சாலையும் அமைய உள்ளது. இன்று நான் துவக்கி வைத்த விவசாயிகள் பெருவிழா கண்காட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை, பால் வளத் துறை, மீன் வளத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, தோட்டக் கலைத் துறை, கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம், வேளாண் பல்கலைக் கழகம், மீன் அறிவியல் பல்கலைக் கழகம், பொதுப் பணித் துறை உள்ளிட்ட அரசுத் துறைகள் மற்றும் இத்துறை சார்ந்த தனியார் நிறுவனங்களால் 224 அரங்கங்கள் அமைக்கப்பட்டு, நவீன தொழில்நுட்பங்கள் அனைத்தும் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன.

- விவசாயப் பெருமக்களுக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள், சிறப்பு உற்பத்தி முறைகள் குறித்த பொருள் விளக்கம் மற்றும் செயல் விளக்கங்கள் வழங்கப்படும். மேலும், வேளாண், கால்நடை மற்றும் மீன்

வளத் துறை சார்ந்த பல்வேறு பயனுள்ள தொழில்நுட்பங்கள் குறித்த தலைப்புகளில் கருத்தரங்கங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளையும், நாளை மறுநாளும் விவசாயிகளுக்கு கால்நடைகளை எப்படி வளர்த்தால் அதிக லாபம் ஈட்ட முடியும் என்பது குறித்தும், வேளாண் பெருமக்கள் புதிய பயிர் ரகங்கள் குறித்தும், புதிய சாகுபடி முறைகள் குறித்தும் அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்கங்கள் நடைபெற இருக்கின்றன என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

- பால் பண்ணை அமைக்க தேவையான இயந்திரங்கள், கருவிகள் மற்றும் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழில்நுட்ப விளக்கங்களும் கண்காட்சியில் இடம் பெறுகின்றன.
- மீன் வள அரங்கில் பல்வேறு மீன் இனங்கள், வண்ண மீன்கள், மீன் வளத் தொழில்நுட்பங்கள், மதிப்புக் கூட்டிய மீன் உணவுப் பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- வேளாண்மைத் துறையில் பல்வேறு பயிர் சார்ந்த உயர் மகசூல் ரகங்கள், நவீன தொழில்நுட்பங்கள், நுண்ணீர்ப் பாசன அமைப்புகள், வேளாண் இயந்திரங்கள், சூரிய ஒளி மூலம் இயங்கும் பம்ப் செட்டுகள், உலர்ப்பான்கள், வேலிகள், பல்வேறு திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் தயாரிக்கப்பட்ட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள், வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய வேளாண் வணிக தொழில் நிறுவனதாரர்கள் குறித்த அனைத்து தகவல்களுமே இந்தக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல, இன்றைக்கு விவசாய பெருவிழா என்று சொல்கின்ற போது, விவசாயிகள் வந்து இங்கே பார்வையிடுகின்ற போது, வேளாண்மை பற்றியும், கால்நடை வளர்ப்பை பற்றியும் முழுமையாக தெரிந்து கொள்ளலாம். என்னென்ன ரக பயிர்களை எந்தெந்த

காலங்களில் பயிரிட வேண்டும், நோய் தாக்கப்பட்டால் என்ன பூச்சி மருந்து தெளிக்க வேண்டும், என்ற தகவல்கள் எல்லாம் இந்த கண்காட்சி மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

- இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி பல்துறை நிபுணர்கள் வல்லுநர்களிடம் விவசாயப் பெருமக்களாகிய நீங்களும், மாணவர்களும் சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொண்டு பயன்பெறுமாறும் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் தாங்கள் இந்த கண்காட்சியில் தெரிந்து கொண்ட பல்வேறு தொழில்நுட்ப விஷயங்களை இங்கு வராமல் இருக்கும் தங்கள் சுற்றத்தாருக்கும் தெரிவித்து அவர்களும் பயன்பெற வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
- இவ்வளாகத்திற்கான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்திட **262.16** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **11** எம்.எல்.டி. தண்ணீரை மேட்டூர் அணையிலிருந்து கொண்டு வந்து, இப்பகுதிக்கு வழங்கப்படும்.
- இன்று நடைபெறும் இவ்விழாவில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை நாங்கள் வழங்கி இருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மாவுடைய அரசு வேளாண்மை, தொழில், மனிதவள மேம்பாடு, பொது சுகாதாரம், உட்கட்டமைப்பு வசதிகள், சமூகநல திட்டங்கள் உள்ளிட்ட பத்து துறைகளில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஐம்பது குறியீடுகளின் அடிப்படையில், **2019**க்கான மத்திய அரசின் நல் ஆளுமை குறியீட்டு அறிக்கையில் **தமிழ்நாடு முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் காரணமாக மத்திய அரசு மட்டுமன்றி, பல்வேறு அமைப்புகளின் விருதுகளையும் இந்த அரசு பெற்றுள்ளது. இதைக் கண்டு பொறாமையில் இருக்கும் எதிர்க் கட்சியினர், விருது வழங்குபவர்களை கொச்சைப்படுத்தும்

முயற்சியில் இறங்கியிருக்கின்றனர். எதிர்க்கட்சி தலைவர் ஊடகத்திலும், பத்திரிகையிலும் தெரிவித்தார். தமிழ்நாடு அரசுக்கு விருது கொடுத்தவர் யார் ? அவரை கூப்பிட்டு வாருங்கள், நான் அடிக்க வேண்டும் என்று சொன்னார். தேசிய விருது பெறுவது எவ்வளவு பெருமை. அதுவும் தமிழ்நாடு இன்றைக்கு முதன்மையாக வந்திருக்கின்றது என்று சொன்னால், அது அனைவருக்கும் பெருமை. தனிப்பட்ட அரசிற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே பெருமை. ஆனால் ஒருவருக்கு மட்டும் பொறுத்து கொள்ள முடியவில்லை. அவர் தான் எதிர்க்கட்சி தலைவர். இந்த விருது பெறுவதற்கு கடுமையாக உழைத்த அரசு அலுவலர்களுக்கும் இன்றைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைக் கூறும் போது எனக்கு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரில் வயதான முதியவர் ஒரு குடிசை வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார். திடீரென்று ஒரு நாள் அவர் கண் முன்னே ஒரு தேவதை தோன்றி, மந்திரக் கண்ணாடி ஒன்றை பரிசாக அளித்து, இந்த மந்திரக் கண்ணாடியிடம் ஒருவர் மூன்று விருப்பங்களைச் சொன்னால் அது நிறைவேறும் எனக்கூறிச் சென்றார்.

அதனை பரிசோதிக்க, உடனே அந்த முதியவர் தன் குடிசை வீடு மாடி வீடாக மாற வேண்டும் என்று கேட்டார். உடனே அந்த குடிசை, மாடி வீடாக மாறியது. இரண்டாவதாக, நல்ல மழை பெய்து தனது ஊரில் உள்ள குளம், குட்டைகள் நிரம்ப வேண்டும் எனக் கேட்டார். மறு நிமிடமே, நல்ல மழை பெய்து அன்றே அந்த ஊரில் இருந்த குளம், குட்டைகள் நிரம்பியது. சற்று யோசித்த அந்த நல்ல மனிதர், தான் வாழும் இந்த ஊர், சகல வசதியுடன் சொர்க்க பூமியாக மாற வேண்டும் எனக் கேட்டார். வெளியில் வந்து பார்த்தால், அந்த ஊரே சொர்க்கம் போல் மாறியிருந்தது.

மறுநாள் காலையில், எதிர் வீட்டில் குடியிருந்த நபர், ‘‘இரவு முழுவதும் திடீர் மழை பெய்தது. இவரது குடிசை வீடு ஒரே நாளில் எப்படி மாடி வீடாக மாறியது? ஊரே மாறிவிட்டதே’’ என்று ஆச்சரியப்பட்டு, அந்த முதியவரிடம் ‘‘என்ன நடந்தது ?’’ எனக் கேட்டார். முதியவரும் நடந்ததை நடந்தவாறே கூறினார்.

பேராசையும், பொறாமையும் கொண்ட அந்த எதிர்வீட்டு நபர், ஒரே ஒரு நாள் அந்த மந்திரக் கண்ணாடியை தருமாறு கேட்டார். அந்த முதியவரும் பெரிய மனதுடன் அக்கண்ணாடியைக் கொடுத்தார்.

அதை எடுத்துச் சென்ற எதிர்வீட்டுக்காரரின் மூக்கு சப்பையாக இருந்ததால், எனது இந்த சப்பை மூக்குக்குப் பதிலாக பெரிய மூக்கு வேண்டும் என்று மந்திரக் கண்ணாடியிடம் கேட்டார். உடனே அவரது மூக்கு **3** அடி நீளத்திற்கு பெரிதானது. உடனே அந்த மந்திரக் கண்ணாடியிடம் எனக்கு இந்த மூக்கு வேண்டவே வேண்டாம் என்றார். உடனே மூக்கு முற்றிலுமாக மறைந்துவிட்டது. இதைக் கண்டு பயந்துபோன அந்த நபர், எனக்கு பழைய மூக்கே பரவாயில்லை என்று தனது மூன்றாவது கோரிக்கையாக அந்த மந்திரக் கண்ணாடியிடம் கேட்டதும், மீண்டும் அவருக்கு பழைய மூக்கே வந்துவிட்டது. பின்னர் அவர் எது கேட்டாலும், நடக்கவில்லை. ஏனென்றால், மூன்று விருப்பங்களும் தன்னுடைய சுயநலத்திற்காகவே கேட்டு விட்டார், ஆனால் எந்தப் பலனும், மாற்றமும் இல்லை. காரணம் மூன்று கோரிக்கைகளுமே தனது சொந்த நலனைப் பற்றியது மட்டும் தான். அதனால் பேராசை பிடித்த நபர்களுக்கு எந்த வாய்ப்பு கிடைத்தாலும், அது பயன்படப் போவதில்லை.

இந்தக் கதையில் வரும் முதியவர் முதலில் தனக்காக ஒரு வரம் கேட்டு மாடி வீடு பெற்றார். அந்த மந்திரக் கண்ணாடி நன்றாக வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து, மற்ற இரண்டு கோரிக்கைகளையும் பொது நலனுக்காக செய்தார். ஆனால், எதிர் வீட்டுக்காரர் தனது சுயநலனுக்கான கோரிக்கைகளை மட்டுமே வைத்தார். அதனால் அவர் உட்பட யாருக்கும் எந்தப் பலனும் இல்லாமல் போனது.

இந்த எதிர்வீட்டுக்காரர் போல் தான் இங்கு உள்ள எதிர்க்கட்சிகளும், இந்த அரசின் செயல்பாடுகளால், விருதுகள் வாங்குகிறார்களே, மக்களிடம் நல்ல பெயர் ஏற்பட்டு விடுகிறதே, நமக்கு நாளை எதிர்காலம் உண்டா என்று எண்ணி பயந்து, பொறாமைப்பட்டு, தினமும் வாயைத் திறந்தால் பொய் பேசி, மக்களிடம் பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

உதாரணத்திற்கு நெடுவாசல் பிரச்சனை. என்ன தான் மத்திய அரசு திட்டம் கொண்டு வந்தாலும், மாநில அரசு தடையில்லாச் சான்று அளிக்காமல், அங்கு பணிகளைத் தொடங்கவே முடியாது. இது அனைவருக்கும் தெரியும். எதிர்க்கட்சி தலைவருக்கும் தெரியும். மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும், மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு போதும் அதற்கு தடையில்லாச் சான்று வழங்காது என்று, சட்டமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, பல முறை நான் வலியுறுத்தி வருகிறேன். உண்மை நிலை என்னவென்றால், தஞ்சை நெற்களஞ்சியத்தை பாலைவனமாக்கும் திட்டத்திற்கு வித்திட்டது திமுக–வில் அங்கம் வகிக்கின்ற திரு.டி.ஆர்.பாலு தான். **1996**–ஆம் ஆண்டு ராஜஸ்தான் பாலைவனத்தில் மீத்தேன் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது. அதை அறிந்த அப்போதைய பெட்ரோலியத் துறை இணை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு, இத்திட்டத்தை தமிழ்நாட்டின் டெல்டா பகுதியில் செயல்படுத்த முடிவெடுத்து, **2010**ல் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றார். அதே போல ஆழ்துளை கிணறு அமைத்து ஆய்வுப் பணி துவங்க, நான்கு ஆண்டுகளுக்கு கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேசன் நிறுவனத்திற்கு **2011** ஜனவரி மாதத்தில் அனுமதி அளித்தது திமுக அரசு தான். அதுவும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தான் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில், இத்திட்டத்திற்கான அனைத்து உதவியையும் தமிழ்நாடு அரசு செய்யும் என்று அப்போதைய திமுக அரசு கூறியது. ஆனால் தற்போது தங்களது பொய்ப் பிரச்சாரம் மூலம் தங்கள் கட்சியினரைத் திரட்டி, அங்கே போராட்டம் செய்வோம் என்று பிரச்சனை கிளப்பி வருகின்றனர். இந்த ஹைட்ரோ கார்பன் திட்டத்தை கொண்டு வந்ததே திமுக தான், நிறைவேற்றியதும் திமுக தான், இதை பேட்டியிலேயே திரு.டி.ஆர். பாலு அவர்கள் தெரிவித்தார். அது ஊடகத்திலும், பத்திரிகையிலும் வெளி வந்திருக்கின்றன. திமுக தான் அதை கொண்டு வந்தது என்பதை அவர்களே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். அதை தடுத்து நிறுத்தியது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. இந்த திட்டத்தை

எல்லாம் தடுத்து நிறுத்தியது எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

**‘‘ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லே**
**என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே’’**

என்ற திரைப்பட பாடல் வரிகளுக்கேற்ப, மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதுமே விவசாயத்திற்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறது. வேளாண்மைக்கு குறிப்பாக, உணவு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்ய அதிக முக்கியத்துவம் அளித்துவரும் அதே வேளையில், வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் தொழிற்சாலைகளையும், இதர சேவை பிரிவுகளையும் தமிழ்நாடு அரசு ஊக்குவித்து வருகிறது.

டெல்டா மாவட்ட விவசாயிகள் நீராதாரம் பெறுவதற்கு பொன்னியின் செல்வி மாண்புமிகு அம்மா அவர்களும், தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் நடத்திய சட்டப் போராட்டத்தின் காரணமாக, மாண்புமிகு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர்முறைப்படுத்தும் குழு ஆகியவை அமைக்கப்பட்டு, காவேரியில் உள்ள தமிழ்நாட்டின் உரிமை நிலைநாட்டப்பட்டது. இதை அனைத்தையும் செய்தது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான். மாண்புமிகு அம்மாவின் அரசு, பரம்பிக்குளம், முல்லைப்பெரியாறு போன்ற பிரச்சனைகளில் தமிழக விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, சட்டரீதியான நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், பிற நடவடிக்கைகளையும் தொடர்ந்து எடுத்து வருகிறது. அதற்கு உதாரணமாக, மேற்கண்ட நதிநீர் பிரச்சனைகள் சம்பந்தமாக, மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களை நானே நேரில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினேன். இந்த முயற்சி தற்பொழுது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

டெல்டா பகுதிகளில் மழை பொய்த்ததன் காரணமாக, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் விவசாயம் பாதிக்கப்பட்டபோது, நிலத்தடி நீரைப்

பயன்படுத்தி சாகுபடி செய்ய ஏதுவாக இன்றைக்கு அம்மாவின் அரசு சிறப்பு குறுவை தொகுப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

சுமார் 28 லட்சம் ஏக்கர் பரப்பளவில் 33 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யும் காவேரி டெல்டா பகுதியானது, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குகிறது. இப்பகுதி விவசாயிகள் வெள்ளம், வறட்சி மற்றும் புயல் போன்ற இயற்கை சவால்களை அடிக்கடி எதிர்கொண்ட போதும், விவசாய உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஹைட்ரோ கார்பன் போன்ற திட்டங்களால் விவசாயிகள் மற்றும் வேளாண் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்த கவலை அவர்களுக்கு எழுந்துள்ளது நியாயமானது. விவசாய உற்பத்திக்கு முக்கிய பகுதியாக உள்ள காவேரி டெல்டா பகுதி, கடல்சார்ந்த பகுதியாக உள்ளதால் கடல்நீர் உட்புக வாய்ப்புள்ளது. இதனால், இப்பகுதியை பாதுகாக்க வேண்டியது அவசியமாகிறது.

கரிகால் பெருவளத்தான் காலத்திற்கு முன்பிருந்தே, தமிழர்களின் உணர்வோடு இரண்டறக் கலந்துள்ள பாரம்பரியம் மிக்க காவேரி டெல்டா பகுதியினை மேலும் பல்லாயிரம் ஆண்டுகள் பாதுகாத்திடவும், வேளாண் தொழிலுக்கு எவ்வித இடையூறும் எப்போதும் வந்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க அறிவிப்பினை இந்த விவசாய பெருவிழாவிலே நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

**தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாம் காவேரி டெல்டா பகுதி விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாட்டின் உணவு பாதுகாப்பினை உறுதிபடுத்திடவும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், புதுக்கோட்டை, கடலூர் அரியலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள காவேரி டெல்டா பகுதிகளை "பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக" மாற்றப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுகின்றேன். டெல்டா மாவட்டங்களை பாதுகாப்பதற்காக எங்களுடைய அரசு காவேரி டெல்டா பகுதிகளை "பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக" மாற்றப்படும் என்ற**

**அறிவிப்பை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட காலமாக டெல்டா பகுதியிலே இருக்கின்ற விவசாய பெருமக்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி வருகிறார்கள். ஆகவே, அந்த உள்ளக் குமுறல்களை எங்களுடைய அரசு உணர்வுபூர்வமாக தெரிந்து கொண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். நானும் ஒரு விவசாயி என்ற வகையிலே, முதலமைச்சராக இருந்தாலும் நானும் ஒரு விவசாயி, அந்த விவசாயி என்ற நிலையிலே இருந்து பார்த்து, விவசாயிகள் படும் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், முழுமையாக அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக இதனை நான் அறிவித்திருக்கின்றேன். இதை செயல்படுத்திட சட்ட வல்லுநர்களை கலந்தாலோசித்து, வழிமுறைகளை ஆராய்ந்து, இதற்கான ஒரு தனிச் சட்டம் இயற்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று நான் உறுதிபட தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பகுதியில் புதிதாக ஹைட்ரோ கார்பன் போன்ற திட்டங்களை தொடங்குவதற்கு இவ்வரசு எப்போதும் அனுமதி அளிக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஒரு விவசாயி, விவசாயிகளின்** வாழ்வாதாரம் பாதிக்கக்கூடிய எந்த திட்டத்தையும் தமிழகத்திலே இனி கொண்டு வர முடியாது, அதற்கு நாங்கள் அனுமதியும் அளிக்க மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனினும், காவேரி டெல்டா பகுதியில் விளையும் விளைபொருட்களை மூலப்பொருட்களாக கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளையும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளையும் தேவைக்கேற்ப இவ்வரசு ஊக்குவிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை நல்ல முறையில் செய்தவர் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். மிக துரிதமாக செயல்பட்டு இருக்கின்றார். இந்த நிகழ்ச்சி சீரோடும் சிறப்போடும் இன்றைக்கு நடைபெறுவதற்கும், அரங்குகள் அமைப்பதற்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், இரவு பகல் பாராமல் பணியாற்றினார்.

பலமுறை நேரடியாக வந்து பார்வையிட்டு, எப்படி எல்லாம் அரங்கம் அமைக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். அவருக்கு உறுதுணையாக இருந்த கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை செயலாளர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை செயலாளர் அவர்களுக்கும், தலைமைச் செயலாளர் அவர்களுக்கும், இந்த நேரத்திலே எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களுடைய அரசு விவசாயிகளுடைய அரசு. அதை நிலைநாட்டி இருக்கின்றோம். இந்த நாட்டிற்கு உணவு வழங்குகின்றவர் விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள். அவர்கள் மீது அக்கறை செலுத்த வேண்டியது அரசு தான். அந்த அடிப்படையிலே தான் நாங்கள் கண்ணும் கருத்துமாக, எப்படி எல்லாம் வேளாண் பணிகள் சிறக்க வேண்டும். இன்றைக்கு வேளாண் தொழிலோடு உப தொழிலாக இருக்கின்ற கால்நடைகள் சிறப்பாக வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக தான் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றோம். கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 25 அரங்குகளும், ஆவின் சார்பில் 21 அரங்குகளும், மீன் வளத்துறை சார்பில் 10 அரங்குகளும், வேளாண்மை, வேளாண் பொறியியல் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் 142 அரங்குகளும், இதர துறைகளின் சார்பில் 26 அரங்குகளும், என மொத்தம் 224 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தனை அரங்குகளையும் வேளாண் பெருமக்கள் சுற்றிப் பார்க்க வேண்டும். 224 அரங்குகளுமே முழுக்க முழுக்க வேளாண் பெருமக்களுக்காக அமைக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு வேளாண் பெருமக்கள் வேளாண் பணிகளை விஞ்ஞான முறைப்படி மேற்கொள்ள வேண்டும்.

கால்நடை வளர்ப்பு தொழிலில் இரட்டிப்பு வருமானம் பெருக்க வேண்டும் என்பதற்காக தான் இன்றைக்கு கால்நடை பூங்கா அமைக்க இருக்கின்றோம். இந்த கால்நடை ஆராய்ச்சி நிலையம் மூலமாக நம்முடைய தட்பவெட்ப நிலைக்கு ஏற்றவாறு கலப்பின பசுக்களை உருவாக்கி நம்முடைய விவசாயிகளுக்கு கொடுத்து, அதன்மூலம், அதிக அளவிலே பால் உற்பத்தி செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கும். அதற்காகத்

தான் ஆசியாவிலேயே மிகப்பெரிய ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்காவினை நமது தமிழகத்திலே, சேலம் மாவட்டத்திலே, தலைவாசல், கூட்ரோட்டிலே அமைக்க இருக்கின்றோம். கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கும், சேலம் மாவட்டத்திற்கும் இடையிலே அமைக்கப்பட இருக்கின்றது. சேலம் மாவட்டத்தை விட கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் அதிக பயன் பெறுவார்கள். அதுமட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அங்கே இருக்கின்ற பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள், புதிய மாவட்டத்தை உருவாக்கி தர வேண்டும் என்று கோரினார்கள். அதன்படி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தை விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து பிரித்து உருவாக்கி தந்திருக்கின்றோம். கள்ளக்குறிச்சி மாவட்டம் ஆரம்பித்து குறுகிய காலம் தான் ஆகின்றது, அதற்குள் புதிய அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கேட்டார்கள். புதிய மாவட்டம் ஆரம்பித்து ஒரு சில மாதங்களிலே புதிய அரசு மருத்துவக் கல்லூரியை உருவாக்கி தந்த அரசு அம்மாவுடைய அரசு. ஏற்கனவே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது கூட சொன்னார்கள், ஒரு வருடத்தில் 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை கொண்டு வந்த ஒரு அரசாங்கம், அம்மாவுடைய அரசாங்கம் தான். இப்புதிய மருத்துவக் கல்லூரி கொண்டு வந்ததன் விளைவாக, 1,100 மாணவர்கள் புதிதாக சேர்ந்து மருத்துவப் படிப்பு படிக்கக் கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கி தந்திருக்கின்றோம். ஒரு அரசு எவ்வாறு செயல்பட்டு கொண்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி தலைவர் அவர்களுக்கு மட்டும் இது கண்ணுக்கு தெரிய வில்லை. எப்பொழுது பார்த்தாலும், இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டும், இந்த ஆட்சி மக்கள் விரோத ஆட்சி என்று கூறுகிறார். இந்த ஆட்சியா மக்கள் விரோத ஆட்சி ? எவ்வளவு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றி இருக்கின்றோம். எத்தனை மருத்துவக் கல்லூரிகளை துவக்கி இருக்கின்றோம். எத்தனை கால்நடை மருத்துவமனைகளை தொடங்கி இருக்கின்றோம். நாட்டிலேயே அதிக அளவில் கால்நடை மருத்துவமனைகளை துவக்கியது அம்மாவுடைய அரசு தான்.

வேளாண் கல்லூரிகளை அதிக அளவில் துவக்கியதும் அம்மாவுடைய அரசு தான். எல்லா வகையிலுமே வேளாண் மக்களுக்கு பாதுகாவலனாக இருப்பது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு தான். ஆகவே, எதிர்க்கட்சி தலைவராகிய நீங்கள் என்ன வேண்டுமானாலும் பொய் பேசலாம். என்ன வேண்டுமானாலும் அவதூறு சொல்லலாம். முதலமைச்சரை பற்றி அவதூறு பேசுவது, அரசு விருது வாங்கினால் அவதூறு செய்தியை வெளியிடுவது, மாண்புமிகு அமைச்சர்களை பற்றி அவதூறு செய்திகளை பரப்புவது, ஆகவே இப்படி அவதூறு செய்தி பரப்பி, பரப்பி அதில் ஏதாவது அரசியல் ஆதாயம் தேடலாம் என்று முயற்சிக்கின்றார். ஒன்றுமே நடைபெறாது. ஏன் என்றால் நாங்கள் உழைக்க பிறந்தவர்கள். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வளர்க்கப்பட்ட இயக்கம் அனைத்தந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். இருபெரும் தலைவர்கள் உருவாக்கிய கட்சி ஆட்சியில் இருக்கிறது. இருபெரும் தலைவர்களும் மக்களுக்காக பணியாற்றி, தங்கள் வாழ்நாள் முழுவதும் நாட்டு மக்களுக்காக வாழ்ந்து மறைந்த ஒப்பற்ற தலைவர்கள். அவர்களது கனவை நனவாக்குவது எங்களது லட்சியம். அந்த லட்சியத்தை நாங்கள் இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே, எதிர்க்கட்சி தலைவராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு அவதூறு பிரச்சாரங்களை பரப்பினாலும், மக்களிடத்திலே எடுபடாது. உழைக்கின்ற இயக்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். உழைக்கின்ற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. நாட்டு மக்களுக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு எங்களுடைய சேவையை செய்து கொண்டு இருக்கின்றோம். இருபெரும் தலைவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்து, நாட்டு மக்களுக்காக உழைத்து, மறைந்த அந்த தலைவர்களின் எண்ணங்களிலே, லட்சியங்களிலே எங்களுடைய பயணம் தொடரும், தொடரும் என்று சொல்லி,

இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கு உறுதுணையாக இருந்த கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களுக்கும், வேளாண்மைத் துறை சேர்ந்த அலுலவர்களுக்கும் மற்றும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், இந்தப் பகுதியிலே இருக்கின்ற உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள், ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்கள், அனைவருக்கும் நன்றியை தெரிவித்து, பெரும் திரளாக வரலாற்று சிறப்புமிக்க இந்த நிகழ்விலே பங்கு பெற்ற அத்தனை வேளாண் பெருமக்களுக்கும், வேளாண் தொழிலாளர்களுக்கும், நன்றி தெரிவித்து, இந்த ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா உலகளவிலே பிரசித்தி பெற்ற கால்நடை பூங்காவாக விளங்கும் விளங்கும் என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், அதோடு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு கோரிக்கை வைத்தார்கள். செல்லப் பிராணிகளுக்கு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் என்று சொன்னார். அந்த கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்று சொல்லி, விடைபெறுகிறேன்.

நன்றி !

வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**